Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று
யாழ்ப்பாணம்.

# ஈழமுரசு

முரசு 1 18-1-1985 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி தை 5) முழக்கம் 177

## திருமலையில் கண்ணிவெடி வதந்தி நேற்று ரயில் சேவைகள் ரத்து

(திருமலை)

திருமலை பிரதான புகையிரதப் பாதையின் பல இடங்களில் கண்ணிவெடி வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த ரகசிய தகவலொன்றைத் தொடர்ந்து திருமலைக்கான சகல ரயில் சேவைகளும் நேற்று ரத்துச் செய்யப்பட்டன. கல்லோயாச் சந்திக்கும் திருமலைக்குமிடையிலான ரயில் பாதை பாதுகாப்புப் படையினரால் நுணுக்கமாகப் பரிசோதனையிடப்பட்டு வருவதாக செய்தி அச்சுக்குப் போகும் போது தகவல் கிடைத்தது. ஆனாலும் குண்டு எதுவும் மீட்கப்படவில்லை. ரயில் சேவைகள் ரத்தானதால் பிரயாணிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகினர்.

## இலங்கை இனப்பிரச்சினைக்கு படைபலத்தால் தீர்வு காண முடியாது! : ஜனாதிபதி ஜெயில்சிங்

(புதுடில்லி)

''இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் படை பலத்தால் தீர்வுகாணமுடியாது'' என்று பாரத ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் நேற்று லோகசபை ராஜ்ய சபைகளின் ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு காணப்படவேண்டும். படை பலத்தால் பிரச்சினை தீராது. இதனால் பயன் கிடைக்காது. புகலிடம் கோரி பாரதம் வந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் திரும்பும் சூழ்நிலை உருவாக வேண்டும்'' என்று கூறிய ஜனாதிபதி, 'பாரதம் அண்டைநாடுகளுடன் நெருங்கிய நட்புறவையும், ஒத்துழைப்பையும் வைத்திருக்கவே விரும்புகிறது'' என்றும் சொன்னார்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் புதிய மந்திரிசபை கடைப்பிடிக்கவுள்ள பத்து அம்சத் திட்டம் பற்றி பாரத ஜனாதிபதி ஜெயில்சிங் தமதுரையில் குறிப்பிட்டார். கட்சித்தாவல் தடுப்பு கல்வி, ஜவுளி பற்றிய புதிய கொள்கை, விரைவாக நீதி கிடைக்க செய்யப்படவுள்ள நீதிச் சீர்திருத்தங்கள், மகளிர் தேசியதிட்டம், கங்கை நதிப் புனிதத் திட்டம் என்பன இந்தப் பத்து அம்சத்திட்டத்துள்ளடங்குவனவாகும். கங்கைநதி நீரைச் சுத்தமாக்க ஒரு மத்தியகுழு அமைக்கப்படுவதும் இத்திட்டங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# படகுமீது சூடு; இளம்பெண் பலி மூவர் காயம்; 19 பேர் கைதாகினர்

## தமிழகத்துக்கு அகதிகளாக செல்கையில் கடற்படை வீரர்களினால் சுடப்பட்டனராம்!

(காங்கேசன்துறை)

மயிலிட்டியிலிருந்து தமிழ்நாட்டுக்கு இருபத்திமூன்று அகதிகளுடன் சென்றுகொண்டிருந்ததாகக் கூறப்படும் படகொன்றின்மீது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் பதினெட்டு வயது இளம் பெண்ணொருவர் மரணமானார். பத்து மாதச்சிசுவொன்று உட்பட மூவர் படுகாயமுற்றனர். மிகுதிப் பத்தொன்பது பேரும் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

நேற்று அதிகாலையளவில் காங்கேசன்துறைக்கு அண்மையிலுள்ள கடற்பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தினால் மரணமான விஜயலட்சுமி பெருமாள் என்ற இளம் பெண்ணின் சடலம் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் உறவினர்கள் வருகைக்காக வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமுற்றவர்களில் ஒருவரான துரைராஜா செல்வரத்தினராஜா (36) நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார். காயமுற்ற மற்றிருவரான பத்துமாதச் சிசுவும், அறுபதுவயது வயோதிபரும்

—4ம் பக்கம் பார்க்க

## முள்ளிப்பாலம் வீதி செப்பனிடும் போது

## துப்பாக்கிச் சூடு: இருவர் காயத்துடன் ஆஸ்பத்திரியில்

பொங்கல் தினத்தன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட நெல்லியடி— கொடிகாமம் வீதியின் முள்ளிப்பாலம் நேற்று முன்தினம் இளைஞர்களால் செப்பனிடப்பட்ட போது ஹெலிகப்டர் ஒன்று வட்டமிடுக் கொண்டிருந்தது.

சிலமணி நேரத்தால் அவ்விடத்துக்கு வந்த சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்தனர். இதனால் அவ்வழியால் வந்த உழவு யந்திர சாரதியும்,

—4-ஆம் பக்கம் பார்க்க

### ★ பிந்தி வந்த செய்தி

செப்பனிடப்பட்ட முள்ளிப்பாலம் இனம் தெரியாதவர்களால் மீண்டும் நேற்றுமாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

## பாதுகாப்பு வட்டாரம் பரபரப்பு
## பெல்ஜியத்தில் பிடிபட்டவர் சிறிசபாரத்தினமா?

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரான சிறிசபாரத்தினம் பெல்ஜியத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளாரா? கொழும்பு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களுக்கு இவ்வாறான தகவலொன்று கிடைத்ததைத் தொடர்ந்து இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் பெல்ஜியத்துக்கு உடனடியாக அனுப்பப்பட்டுள்ளனர்.

''போலிக் கடவுச் சீட்டொன்றுடன் பெல்ஜியத்தில் பிடிபட்டிருப்பவர் சிறிசபாரத்தினம் என்பதாக ஊர்ஜிதப் படுத்தப்படாத செய்திகள் கூறுவதாக'' பி.பி.ஸி. தனது செய்தியறிக்கையில் நேற்றி

—4ம் பக்கம் பார்க்க

## தொலைபேசி கொள்ளை

(மட்டுநகர்)

மட்டுநகர் மாவட்ட அபிவிருத்திச் சபையின் ஆரைப்பத்தை உப அலுவலகத்தினுள் நேற்று முன்தினம் நுழைந்த இனம் தெரியாத இளைஞர்கள் காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு கண்ணாடி யன்னல்களை உடைத்து தொலைபேசியைக் கொள்ளையடித்துச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## களுவாஞ்சிக்குடி நேற்று திடீர் முற்றுகை; ஐம்பது வரையான வாலிபர்கள் கைது!

(மட்டுநகர்)

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள களுவாஞ்சிக்குடிப் பகுதியை நேற்றுத் திடீரென முற்றுகையிட்ட பாதுகாப்புப் படையினர், மிகக் கடுமையான சோதனையை இப்பகுதியில் மேற்கொண்டனர்.

ஜீப், ட்ரக், இ. போ. ச. பஸ் ஆகியவைகளில் களுவாஞ்சிக்குடிக்கு நேற்றுக் காலை சென்ற இவர்கள் சந்தேகத்துக்குரியவர்கள் என கூறப்படும் சுமார் ஐம்பதுக்கும் அதிகமான இளைஞர்களை மேல் விசாரணைக்காகக் கொண்டு சென்றதாகத் தெரிய வந்துள்ளது.

போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் ஏற்றப்பட்ட இவ் இளைஞர்கள் பலத்த பாதுகாப்புடன் நேற்று நண்பகலளவில் மட்டுநகருக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சில மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட இவர்கள் பின்னர் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பூரண விசாரணையின் பின்னர் தீவிரவாத இயக்கத்துடன் சம்பந்தப்படாதவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

## கிழக்கில் இடைத்தேர்தல் நடத்த முனைவது ஜனநாயகத்தைக் கேலி செய்வதாகும்!

(சென்னை)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, பட்டிருப்புத் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்தப்படும் என்ற இலங்கை அரசின் முடிவுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குத் தந்திஅனுப்பி வைத்துள்ளார் என்று நேற்றுச் சென்னையிலிருந்து வெளி

—4-ம் பக்கம் பார்க்க

## பூஸா இளைஞர் 25 பேர் விடுதலை

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் 25பேர் இன்று விடுதலை

—4-ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் 'தேவா' பேச்சு:
## கிழக்கு மாகாண மக்கள் பயங்கரவாதத்துக்கு எதிர்!

தமிழ் மக்களுள் பெரும்பான்மையோர், குறிப்பாக கிழக்குமாகாணத்தவர்கள் பயங்கரவாதத்திற்கு எதிராக அரசுக்கு தமது பூரண ஆதரவை வழங்கிவருகின்றனர். எனவே தீவிரவாதிகள் தமது

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பொலிஸ் உயர்பீடம் மேலும் பல மாற்றங்கள்

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டனாக இம்மாதம் 20ம் திகதி முதல் நியமனம் பெற்றிருந்த திரு. பி. உடுகம்பலவின் இடத்துக்காக, பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து சுப்பிரின்டன் திரு பெர்னாண்டோ இடமாற்றம் பெற்றுள்ளார். இம் மாதம் 21-ம் திகதி இவர் யாழ்ப்பாணம் வருவார்.

யாழ்ப்பாணம் விசேஷ சேவை சுப்பிரின்டன் திரு. குணவர்த்தனாவின் இடத்துக்காக பொலிஸ் சுப்பிரின்டன்

—4ம் பக்கம் பார்க்க

## காவலாளி வெட்டிக் கொலை

நேற்று முன்தினம் இரவு தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இரவுக்

—4-ம் பக்கம் பார்க்க

## மின்சாரப் பிரச்சினை

(குருநகர்)

நாளாந்தம் இரவு நேரங்களில் குருநகர் பகுதியில் மின்சாரம் நின்று விடுவதை இட்டு மக்கள் சமூகசேவைக் கழகங்களுக்கு தெரிவித்திருந்த குறைபாடடை ஒட்டி குருநகர்கலைக் கழகம், கழகத்தலைவர் ஆசிரியர் ஜே அமலசீலன் தலைமையில் கூட்டம் ஒன்றை நடத்தியது.

மக்களின் குறைபாட்டை எடுத்து விளக்கும் மகஜர் ஒன்றைத் தயாரித்து யாழ் மாநகரசபை ஆணையாளரிடம் சையளிக்க வேண்டுமென்ற தீர்மானம் மேற்படி கூட்ட முடிவில் எடுக்கப்பட்டது.

## மீனவருக்கு உணவு முத்திரை

(மானிப்பாய்)

கடற் கண்காணிப்பு வலயத்தால் தொழில் செய்ய முடியாது பாதிக்கப்பட்ட சாவற்கட்டுப் பகுதி கடற்றொழிலாளருக்கு விசேட உணவு முத்திரைகளை துரிதமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

## பலகைப் பாலம்

(சாசாலை)

புத்தூர் பாலத்திற்கு பலகை போட்டு நடை பிரயாணிகள் சிறுவாகனங்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

சைக்கிள்களில் பெருந்தொகையானோர் மேற்படி வீதியால் சந்தைக்கு வந்தார்கள்.

# இடமாற்றம் பெற்றவர்கள் செல்லமுடியாத ஒரு நிலை

(சுண்டுக்குளி)

யாழ் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு இடமாற்றம் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் தாம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்லுவதில் தயக்கம்காட்டி வருகின்றனர்.

போக்குவரத்திலேற்பட்டுள்ள நெருக்கடிகளும், ஒரு மாவட்டத்திலிருந்து வேறொரு மாவட்டத்திற்குச் செல்லுவதில் அனுமதிபெற வேண்டிய நிர்ப்பந்த நிலையும், தற்போது இடமாற்றம் பெற்றுள்ள இடங்களில் தங்கியிருக்க முடியாத நிலையுமே இவ்வூழியர்களின் அச்சத்திற்குக் காரணமாகும்.

பிரஸ்தாப ஊழியர்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காகத் தாம் அலைந்து திரிவதாகவும், அத்துடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்குப் பாதுகாப்பாகப் போக்குவரத்துச் செய்ய முடியாமலிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

## மேலும் பலமான பாதுகாப்பு

(மன்னார்)

மன்னார் பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்புக் கருதி பொலிஸ் நிலைய வளவிலுள்ள பாரிய மரமொன்றின் கிளைகளில் தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள தளத்தின் மேல் ஆயுதம் தாங்கிய பொலீஸார் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

## வைத்தியதிகாரி

(சுண்டுக்குளி)

மானிப்பாய்ப் பகுதிக்குப் புதிதாக மேலதிக சுகாதார வைத்திய அதிகாரியொருவர் இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேச மலேரியாத் தடுப்புப் பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் நாகலிங்கம் விவேகானந்தன் மானிப்பாய்க்கு மேலதிக சுகாதார வைத்திய அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்

### உதவி அரச அதிபர் கந்தோர்

# சிலாவத்துறையில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது

(மன்னார்)

கடந்த இரண்டு மாதங்களாக இயங்காத நிலையிலிருந்த சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சிலாவத்துறைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் பயம்கொண்ட சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர்கள் வேலைக்குச் செல்லாது விடுமுறையில் இருந்தனர்.

இதனால் மன்னார் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றும் சில ஊழியர்கள் சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து கடந்த இரண்டு மாதங்களாக இயங்காத நிலையிலிருந்த சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தற்போது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

## பிறந்தநாள் வாழ்த்து

✳ சுண்டுக்குளி விதானையார் வீதி, சிதம்பரநாதன் பத்மினி தம்பதிகளின் மகன் காளிங்கன் இன்று தன் ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✳ இராசாவின் தோட்ட வீதி, றெனோல்ட் வனிதா தம்பதிகளின் மகன் கெனட்றிச்சிபேனு இன்று தன் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ நாகர்கோவில் வடக்கு, விஜயகுமார் புஷ்பலதா தம்பதிகளின் மகள் சுபத்ரா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ தாவடி வடக்கு, நல்லையா சொர்ணம்மா தம்பதிகளின் மகள் வதனி இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஏழாலை தெற்கு, ஜோன் பிள்ளை பத்மாவதி தம்பதிகளின் மகன் ராஜதீபன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✳ புலோலி கிழக்கு, மணி சாந்தி தம்பதிகளின் மகன் கார்த்திக் இன்று தன் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## வர்த்தகர்களிடம் வேண்டுகோள்

(சுண்டுக்குளி)

பாவனையாளர்களுக்கு உதவும் முகமாக வர்த்தகர்கள் இயன்றவரை கட்டுப்பாட்டு விலைக்கே பொருட்களை விற்பனை செய்ய வேண்டுமென்று மண்டைதீவு கிராம அபிவிருத்திச் சங்கம் மண்டைதீவுப் பகுதி வர்த்தகர்களைக் கோரியுள்ளது.

## வாசகர் வசதிக்காக

(மன்னார்)

மன்னார் பொது நூலகத்திற்கு வரும் வாசகர்களின் நலன் கருதி பொது நூலக வளவினுள் சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் மலசல கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

# சமாதான நீதவானுக்கு இளைஞர் குழுவின் தண்டனை!

(வசாவிளான்)

சமாதான-நீதவான் ஒருவரின் காணியில் குடிசை கட்டி குடியிருந்த விவசாயியையும் அவரது குடும்பத்தினரையும் அடித்துத் துரத்தி விட்டு அவர்களது குடிசையையும் பிடுங்கிய சமாதான நீதவானை இளைஞர் குழு ஒன்று விசாரணை செய்து மக்கள் மத்தியில் வைத்து நையப்புடைத்ததுடன் கடுமையாக எச்சரிக்கையும் செய்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இளைஞர்கள் முதல் தடவை விசாரணைக்காகச் சென்ற போது, இவர் மயக்கம் போட்டுவிழுந்ததால் இளைஞர்கள் சென்று விட்டார்களாம். இரண்டாம் தடவை விசாரணைக்காக இளைஞர்கள் வந்த போதும் அவர் மயங்கி விழுந்த போதிலும், மயக்கம் தெளியும் வரை இளைஞர்கள் காத்திருந்து விசாரணை நடத்தினார்கள் என்று தெரியவந்துள்ளது.

## சுவாமிநாதன் உதவி திட்டமிடல் இயக்குனரானார்

(சுண்டுக்குளி)

யாழ் மாவட்ட உதவித் திட்டமிடல் இயக்குனராக திட்டமிடல் அதிகாரியான திரு வி. செ. சுவாமிநாதன் திட்டம் செயற்படுத்தல் அமைச்சின் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இம்மாவட்டத்தில் 1500க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் குடும்பநலன், போஷாக்கு வருமான உயர்வு ஆகிய துறைகளில் பயிற்சிகளை வழங்குவதற்கான மகளிர் விவகார அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரியாகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏகமனதாக தெரிவானார்

ஓலுமடு கிராமோதய சபைத் தேர்தலில் மாங்குளம் புலிமச்சிநாதகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் திரு. சு. பரந்தாமன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வல்வை சிதம்பராக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## புதிய அதிபர்

(சரசாலை)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி கனிஷ்ட அதிபராக கே. கதிர்காமு நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் வட்டாரக் கல்வியதிகாரி அலுவலகத்தில் முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சைக்கிள் பாவனை அனுமதிவிண்ணப்ப படிவங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (புதியன Latest)

ஏல விற்பனை நிலையம்
கோப்பாய்

### தவறி விட்டது

அரியாலைக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் 16ம்திகதி றொபின்சன் தேவதாஸ் பவர் என்பவரது 65 1521513V இலக்க அடையாள அட்டை பேர்ஸுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.


COMPUTER PROGRAMMING
&
DATA PROCESSING COURSE
(BASIC LANGUAGE)
9th BATCH
WEEKEND CLASSES
COMMENCEMENT (19-1-85 at 9.00a.m)
Fees - 1500/- For further details
CANTABIA INSTITUTE
21, MAIN STREET :: JAFFNA
T'Phone - 24201



திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

இன்று மாலை 2-00 மணி தொடக்கம் 4-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவிருக்கும்,

ஏ. ஜீ. அச்சகம்-புத்தகசாலை

ஸ்தாபனத்தின்

திறப்பு விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

A. L. செல்வநாயகம்
(ஏசியன் அச்சகம்)

165, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

E. V. K. அன்பழகன்
(அன்புஜீ புத்தக நிலையம்)



மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
30-01-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு



உதய சிந்தனை

உங்கள் சுதந்திரத்தில் யாராவது தலையிட்டால் அவ்விதம் தலையிடுவதைத் தடை செய்யுங்கள். -மகாத்மா காந்தி

37, கஸ்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23336

# இதய ஒலி

18-1-85 வெள்ளிக்கிழமை (இரத்தாக்ஷி தை 5)

## ஏழும் பதினேழும் விரிசலைக் கூட்டுமா?

வடக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட கடல் கண்காணிப்பு வலயம் தொடர்பாக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகள், பன்னெடுங்காலமாக அன்னியோன்னியமாக இருந்து வந்த இலங்கை-இந்திய உறவில், விரிசலை ஏற்படுத்தி விடுமோ என்ற பயத்தை இன்று உருவாக்கியுள்ளது.

கலை, கலாசார, பாரம்பரிய ரீதியாக பிரிக்க முடியாத இரு நாட்டின் தொடர்புகளும் மெல்ல மெல்லத் துண்டிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் இரு பகுதியிலும் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்கியுள்ளது.

இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லைக்குள் வைத்து இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதாகவும், சுடப்படுவதாகவும், கொல்லப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டபோதே இது ஒரு பாரிய பிரச்சினையாக வருமென்பதை அரசியல் அவதானிகள் உணரத் தொடங்கினர்.

'' இந்தப் பிரச்சினையை 'சிம்பிளாக' எடுக்கவேண்டாம், பாரிய பிரச்சினைகளை இது உருவாக்கும் '' என்று சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் எம் பி. சரத் முத்தட்டுவேகம சொன்னபோதும் கூட எவரும் '' சீரியஸாக '' எடுத்ததாகத் தெரியவில்லை.

தமது மீனவர்கள் தாக்கப்படுவதை நீண்டகாலத்துக்கு எந்த அரசினால் தான் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? பாரதம் தனது கடற் பிரதேசத்தில் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதால் இலங்கைக் கடற்படையினர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்திய மீனவரை சுட்டுக் கொன்றதான குற்றச்சாட்டில் '' கொலைகாரர்கள் '' என்ற பட்டத்தைப் பெற்றனர் இவர்கள்.

இந்திய மீனவரின் இறால்களையும், வலைகளையும் அடித்துப் பறித்ததால் '' கடல் கொள்ளைக்காரர்கள் '' என்ற திருநாமமும் இவர்களுக்குச் சூட்டப்பட்டுள்ளது.

நாட்டின் கடலோரத்தில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்ட வீரர்கள் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் என்று பட்டம் சூட்டப்பட்டது இந்த நாட்டுக்கே பெரும் அவமானத்தைக் கொடுப்பதாகும்.

அதேவேளையில் மிகச் சுலபமாகத் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்தப் பிரச்சினை அனுமார் வால் போன்று நீண்டுகொண்டே போவது இன்றைய சூழ்நிலையில் ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினையில் பாரதம் காட்டிவரும் கரிசனையால், ஏற்கனவே ''விருப்பமும், விருப்பமின்மையும்'' எமது நாட்டு உயர் அரசியல் வட்டாரங்களில் இருப்பதுவே இச் சிறு பிரச்சினையையும் இன்று இருபகுதியினர் மத்தியிலும் 'இமாலயப் பிரச்சினை' யாக உருவாக்கி வருகிறது என்பது பகிரங்க ரகசியம். உள்ளுக்குள் எதையோ வைத்துக் கொண்டு, வெளியே எதனையோ சாதிப்பதால் பிரச்சினை அதிகரிக்குமே தவிர, குறைவதற்குச் சாத்தியமாகாது.

பிடிபட்ட கடற்படையினர் இன்னமும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாது தடுத்து வைக்கப்பட்டிருப்பதே, இப் பிரச்சினையை இந்தியா சுமுகமாகத் தீர்க்க விரும்புகின்றது என்பதற்கான அறிகுறியாகும்.

இதனை நன்கு தெரிந்து கொண்டும் கடற்சட்டம் பற்றிப் பேசுவதாலும், பயமுறுத்துவதுபோல அறிக்கைகள் விடுவதாலும் எதனையும் சாதித்து விடமுடியாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

இலங்கையில் மூன்று மாதமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் பதினேழு தமிழக மீனவரை விடுதலை செய்யுமாறு பாரதம் விடுத்துள்ள வேண்டுகோளை நிறைவேற்றுவதால், பிரச்சினைகள் தீர்க்கப்படுமென்பதை சம்பந்தப்பட்டவர்கள் அறிய வேண்டும்.

பிரச்சினைகளைச் சமாதானமாகவும், சுலபமாகவும் தீர்ப்பதற்கு இதனைவிட இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்காது!

எமது அரசியலாளர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

---

### இஸ்ரேலியப் பிரதமர் சொல்கிறார்

# தென் லெபனானிலிருந்து நாம் அகன்றதும் கலகம் ஏற்படும்!

(டெல்அவிவ்)

''தென் லெபனானில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டதும் அங்கு வன் முறைகளும், கிளர்ச்சிகளும் பெருகிவிடும்'' என்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெரஸ் தெரிவித்துள்ளார். அத்தகைய நிலையில் இஸ்ரேலிய இராணுவம் தலையிடாது என்றும் அவர் சொன்னார். இஸ்ரேலியத் துருப்புகளின் வாபஸ் மூன்று கட்டங்களாக நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ் பெறப்படல் குறித்து லெபனான் பிரதமர் திரு கராமி கருத்து வெளியிடுகையில் தென் லெபனானிலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டதும் லெபனான் மக்களே தம் பாதுகாப்புக்குப் பொறுப்பு என்று கூறியுள்ளார்.

இஸ்ரேலின் துருப்புகள் வாபஸ் முடிவினை அமெரிக்காவில் ரீகன் நிர்வாகம் வரவேற்றுள்ளது. வெள்ளை மாளிகை இத்தகவலை வெளியிட்டது இதேவேளை, தென் லெபனானில் இருந்து இஸ்ரேலியத் துருப்புகள் வாபஸ் பெறப்படவேண்டும் என்று எகிப்தும் தொடர்ந்து வற்புறுத்திவருகிறது. இஸ்ரேலிய அமைச்சரவை மேற்படி முடிவை எடுத்துள்ள போதிலும் இது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து இஸ்ரேலியக் கூட்டரசில் பலத்த கருத்து மோதல்களை உண்டு பண்ணியதாக ஜெருஸலேம் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அமைச்சரவையில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் இது தொடர்பான சர்ச்சை நடைபெற்றதாகவும் கூறப்பட்டது.

---

### சீக்கிய மதகுரு கொலை முயற்சி

## ''வன்முறைக்கு இடமில்லை'' பிரதமர்ராஜீவ் கண்டனம்

(அமிர்தசரஸ்)

புதன்கிழமையன்று பஞ்சாப் மாநிலக் கிராமம் ஒன்றில் சமய நிகழ்ச்சியில் கலந்து கொண்டபின் திரும்புகையில் இனந்தெரியாத 3 இளைஞர்களால் துப்பாக்கியால் சுடப்பட்ட கிருபால்சிங் என்ற சீக்கியத் தலைமைக்குரு அபாய கட்டத்தைத் தாண்டி விட்டாரென நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டுக் கொலை முயற்சிச் சம்பவத்தை ஜனாதிபதி திரு. ஜெயில்சிங்கும், பிரதமர் திரு. ராஜீவ்காந்தியும் வன்மையாகக் கண்டித்துள்ளனர். ''வன்முறைக்கு ஜனநாயக நடைமுறைகளைப் பேணும் நாடு ஒன்றில் இடமேயில்லை'' என்று பிரதமர் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தைப் பல சீக்கிய ஸ்தாபனங்களும் கண்டித்துள்ளன.

---

## ஆளுநருடன் 'திரு'சந்திப்பு

(சென்னை)

தமிழக சத்துணவுத்துறை மந்திரி திரு எஸ். திருநாவுக்கரசு தமிழக ஆளுநர் திரு. எஸ் எல்.குரானாவை நேற்றுச் சந்தித்துப் பேசினார் இவர் தனது பதவியை ராஜினாமாச் செய்யப் போவதாக அறிவித்துள்ளது தெரிந்ததே.

---

### ''எம். ஜி. ஆர். நியூயோர்க்கில்

## சத்தியப் பிரமாணமா? சாத்தியமில்லை'' - ஆளுநர்

(சென்னை)

''நியூயோர்க்கில் இருந்தபடியே திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக முதலமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொள்வது என்பது சாத்தியமற்றது, இவ்விதம் செய்தால் அது தவறான ஒரு முன்னுதாரணமாகி விடும்'' என்று தமிழக ஆளுநர் திரு. எஸ். எல். குரானா தெரிவித்துள்ளார்.

''புதிய அமைச்சரவை குறித்து திரு. எம்: ஜி ஆரிடம் இருந்து சில விளக்கங்களைப் பெற்ற பின்பே முடிவு செய்யப்படும்'' என்றும் அவர் கூறினார்.

---

### துணை சபாநாயகர்:

## அ.தி.மு.க. எம்.பி. பெயரும் உண்டு

புதிய லோக சபையின் துணை சபாநாயகர் பதவிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தர்மபுரி லோக சபை உறுப்பினரான திரு. தம்பித்துரை, அ. இ அ, தி. மு. க.வினால் பிரேரிக்கப்படவுள்ளார். இத்தகவலை தமிழக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

புதிய துணைச் சபாநாயகர் தெரிவு அடுத்த வார ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒருவரது பெயரை துணைச் சபாநாயகர் பதவிக்குப் பிரேரிக்க முனைவது குறித்துப் பிரதமருடன் ஆலோசிக்கப்படும் என்று ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு மது தண்டவதே நேற்றுப் புதுடில்லியில் தெரிவித்தார்.

---

## தமிழக பொலிஸ் அதிகாரி மறுப்பு

(சென்னை)

இலங்கை வங்காலையில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கும் வண. பிதா. பஸ்ரியனை சில தீவிரவாத இளைஞர்கள் பாரதத்திற்குள் கடத்திவந்து விட்டார்கள் என்ற இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சு வெளியிட்ட தகவலில் உண்மையில்லை என நேற்றுத் தமிழக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் மறுத்தார்.

---

## கட்சி தாவல் தடை?

(புதுடில்லி)

''கட்சித் தாவலைத் தடை செய்வதற்கான மசோதா ஒன்றினைக் கொண்டுவர மத்திய அரசு தீர்மானித்துள்ளது.'' என்று ஜனாதிபதி ஜெயில்சிங் நேற்று முதல் தடவையாகத் தொடங்கிய லோகசபை, ராஜ்யசபையின் கலப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

லோகசபையின் மத்திய மண்டபத்துக்கு ஜனாதிபதி வந்த போது பிரதமர், துணை ஜனாதிபதி, சபாநாயகர் முதலானோர் அவரை எதிர்கொண்டழைத்துச் சென்றனர். உறுப்பினர்கள் கர ஒலியெழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

---

## பாதுகாப்பு

(புதுடில்லி)

பஞ்சாப்பில் சீக்கிய மதகுரு மூன்று சீக்கிய இளைஞர்களால் சுடப்பட்ட சம்பவத்தையடுத்து ஏனைய ஐந்து சீக்கிய மதக் குருக்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

## மோகனரங்கம் உறுதிமொழி

(புதுடில்லி)

லோகசபை, ராஜ்யசபை இரண்டிலும் இந்திராகாங்கிரஸுக்கு அ தி. மு க. முழு ஆதரவளிக்கும் என்று அ. தி. மு. க. சார்பில் திரு. மோகனரங்கம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்று நேரில் சந்தித்து உறுதியளித்தார்.

---

## பிரதமருடன் பேசினார்

(புதுடில்லி)

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு ஜோதிபாசு பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை நேற்றுப் புதுடில்லியில் சந்தித்துப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

---

## 'பாரத தேசம்' லோகசபை எதிர்க்கட்சியாகின்றது

(புதுடில்லி)

லோக சபையின் முக்கிய எதிர்க்கட்சியாக விளங்கும் தகுதிபெற்றுள்ள ஆந்திர முதலமைச்சர் திரு என். டி ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி லோக சபையில் '' பாரத தேசம் '' கட்சி என்ற பெயருடன் செயற்படும்.

தனது கட்சி நாட்டின் ஒற்றுமைக்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும், சோஷலிஸ நோக்கங்களுக்காகவும் பரந்துபட்ட ரீதியில் செயற்படும் என்று திரு. ராமராவ் தெரிவித்தார்.

---

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10 30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷணா. ராதா, தங்கவேலு நடித்த
A V. . இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

# ஈழமுரசு

## வல்லைப் பால வீதியையும் இளைஞர்கள் சீர்செய்கின்றனர்

பொங்கல் தினத்தன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வல்லைப் பால வீதியையும் செப்பனிடும் வேலைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளன சில இளைஞர் குழுக்கள், பொதுமக்களினதும், தொண்டர்களினதும் உதவியுடன் சிரமதானமாக இப்பணியை நேற்று ஆரம்பித்தனர். அச்சுவேலிப் பாதையில் வீதித் திருத்த வேலைக்கென பல மாதங்களுக்கு முன்னர் குவித்துவைக்கப்பட்டிருந்த கல் இதற்காகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. நேற்று மாலை வரை முக்கால் வாசிக்கும் அதிகமான பாதை சீர் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### யாழ். பிரஜைகள்குழுவின் மற்றெரு முயற்சி:

# தமிழர் படுகொலையும், இன்னல்களும் மகாசங்கத்தினருக்குக் கூறப்பட்டது!

(கொழும்பு)

தமிழர்கள் அதிகமாக வாழும் யாழ்ப்பாணப் பகுதியில் அரசபடையினர் தர்மத்துக்குப் புறம்பாக நடந்து கொள்ளும் செயல்கள் பற்றி அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ் பிரஜைகள் குழுப் பிரமுகர்கள், மகாசங்க உயர்பீட பௌத்தகுருமாரைச் சந்தித்து விளக்கிக் கூறினர்.

மகாசங்கத்தினர் இதுவரை அறிந்திராத பல விஷயங்களை பிரஜைகள்குழுவினர் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறிய போது அவர்கள் அவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியதாகவும் தெரியவந்துள்ளது.

1948ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டுவரையில் தமிழ் அரசியல் கட்சிகளின் போக்கில் ஏற்படுத்தப்பட்டு வந்த தாக்கத்தை எடுத்துக் கூறி, திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சி கேட்டு வந்தபோது, தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து சி சுந்தரலிங்கம், வி. நவரத்தினம், பரிஸ்டர் அம்பலவாணர் ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் போட்டியிட்ட போது அவர்களது தனிநாட்டுக் கோரிக்கை மக்களால் நிராகரிக்கப்பட்டதையும், பின்னர் அதே தமிழ் மக்கள் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதையும் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் மகாசங்க உயர் பீடத்தினருக்கு எடுத்துக் கூறியபோது, அவர்கள் இந்த வரலாற்றினைப் பற்றிய மேலும் பல தகவல்களைப் பெறுவதில் அக்கறை காட்டியதாகவும் தெரியவந்துள்ளது

தமிழ் மக்களின் உண்மையான கோரிக்கை சிங்கள மக்கள் முன்னால் வேறு அர்த்தப்பட எடுத்துக் கூறப்படுவதை பிரஜைகள் குழுவினர் வலியுறுத்திச் சுட்டிக்காட்டினர்.

போயா தினங்களிலும் கூட அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள் என்றும் இச் சந்திப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

கலாநிதி வல்பொல ராகுல தேரோ, வண. பஞ்ஞசீல ஞான தேரோ உட்பட மற்றும் பல முக்கிய மதகுருமார் இச் சந்திப்பில் பங்குபற்றினர்.

## பிரஜைகள் குழு வேண்டுகோள்

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சகல பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களின் இணைப்புக்கூட்டம் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது. இதனால் இக்குழுக்களின் முக்கியஸ்தர்கள் விபரங்களை யாழ். பிரஜைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், 52 வைமன் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

யான தகவல் ஒன்று தெரிவித்தது.

'வடக்கு மாகாணம் போன்றே கிழக்கு மாகாணத்திலும் இராணுவ ஆதிக்கமே நீடிக்கிறது. அங்கேபல கிராமங்களில் இராணுவத் தாக்குதலால் தமிழ் மக்கள் வெளியேறியுள்ளார்கள் என்று இத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு பல வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கூடிப் பேசக் கூட அங்கே தடையுள்ளது. வன்முறைகள் வலுத்துவிட்டன இந்நிலையில் அங்கே தேர்தல் நடத்தப்படுவது என்பது ஜனநாயகத்தையே கேலிசெய்வதுபோலாகும்.'' என்று இத் தந்தியில் திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## காவலாளி...

—1-ம் பக்கத் தொடர்

காவலாளியாகக் கடமையாற்றிய இரத்தினம் ஜெயகாந்தன் மிகவும் கோரமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். அவருடைய சடலம் சங்கக் கட்டடத்தின் உட்புறத்தே கிடக்கக் காணப்பட்டது.

## கோப்பாய் கைதடி வீதி தகர்ப்பால் மாணவர், விவசாயிகள் பெரும்பாதிப்பு

(சுண்டுக்குளி)

கைதடி—கோப்பாய்ப் பாலம் பொங்கல் தினத்தன்று அதிகாலை தகர்க்கப்பட்டதையடுத்து உடுவில், மருதனுமடம், கோப்பாய் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களும், மாணவிகளும் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இப்பாலம் விரைவில் திருத்தப்படக்கூடிய சாத்தியம் இல்லாதபடியால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி ஆழ்ந்த கவலைக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் கோப்பாய், உரும்பராய், நீர்வேலிப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தமது வாழைக்குலைகள் போன்ற விளை பொருட்களை சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டு சென்று சந்தைப் படுத்த முடியாத அவல நிலைக்காளாகியுள்ளனர். கைதடி, நுணுவில், மட்டுவில் பகுதிகளிலிருந்து வண்டில்கள்மூலம் கிடுகு, விறகு, தேங்காய், மட்டை போன்றவற்றை ஏற்றிச் சென்று பாலத்திற்கு அப்பாலுள்ள மேற்குப் பகுதிக் கிராமங்களான கோப்பாய், உரும்பராய், திருநெல்வேலி, மருதனுமடம் ஆகிய இடங்களில் அவற்றை விற்றுப் பிழைக்கும் ஏழை மாட்டு வண்டில் காரர்களும் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் ஆளாகியுள்ளனர்.

கைதடி - கோப்பாய்ப் பாலத்தினூடான சகல பஸ் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது பரவைக்கடல் பாலத்தின் கீழ் ஓடுவதால் நீரில் கடந்து உடைந்த பாலத்தைக் கடப்பதற்கும் பெரும் சிரமமடைய வேண்டியுள்ளது.

## ஐ.தே. கட்சி செயற்குழுவில் சிறில்மத்தியுவுக்குஇடமில்லை

(கொழும்பு)

பத்தாண்டுக்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் முக்கியஸ்தராக விளங்கி வந்த முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியு, இவ்வருடத்துக்கான செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

1971ம் ஆண்டில் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வகித்த திரு. சிறில் மத்தியு, அன்று முதல் கடந்த வருடம் வரை தொடர்ச்சியாகக் கட்சியின் செயற்குழுவில் இடம் பெற்று வந்தார்.

கட்சியின் ''ஜாதிக சேவக சங்கமய'' என்ற தொழிற்சங்கத்தின் தலைவர் பதவியையும் கடந்த ஏழு வருடங்களாக இவரே வகித்து வந்தார். தொழிற் சங்க அச்சகம் கடந்த வாரம் பொலிஸாரால்சீல் வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பெல்ஜியத்தில்...

—1ம் பக்கத் தொடர்

ரவு அறிவித்தது.

பெல்ஜியத்தில் இலங்கையர் ஒருவர் பிடிபட்ட செய்தி கொழும்புக்கு நேற்று முன் தினமே அறிவிக்கப்பட்டதாம். கைதானவரை இலங்கை அரசிடம் ஒப்படைக்குமாறு உத்தியோகபூர்வமான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

- குறிப்பு : பிடிபட்டவர் சிறிசபாரத்தினம தானா என்பது செய்தி அச்சுக்குப்போகும்வரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

## கிழக்கு மாகாண...

—1ம் பக்கத் தொடர்

தனிநாட்டுக் குறிக்கோளில் ஒருபோதும் வெல்லப்போவதில்லை என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தேவநாயகம் கூறியுள்ளார்.

பெலியத்தையில் கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர், தமது தொகுதியை வெல்லமுடியாத ஆத்திரத்தில் கூட்டணியினர் எப்போதும் தன்னை எதிர்க்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

பொதுமக்களை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அமைச்சர் அண்டுகோள் விடுத்துள்ளார்.

## படகு மீது...

—1-ம் பக்கத் தொடர்

தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வடக்கில் கடைப்பிடிக்கப்படும் புதிய சட்டங்களால் வறுமையின் காரணமாகவும், நிம்மதியாக வாழ முடியாததாலும் தாம் தமிழ் நாட்டுக்கு அகதியாகச் செல்ல விரும்பியதாக காயமடைந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிடிபட்ட வள்ளத்தில் பயணம செய்த 23 பேரில் எட்டுப் பெண்கள் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது. இவர்கள் பயணம் செய்த படகையும் தள்ளத்துக் கொண்டு சன்னங்கள் உள்ளே சென்றனவாம். படகு கரையிலிருந்து புறப்பட்டு ஏற்பத்தைந்து நிமிடங்களில் இச்சம்பவம நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

## இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

யாழ் பொலீஸ் நிலய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரஞ்சித் டீ சில்வா கொழும்புகோட்டை,பொலீஸ் நிலையத்துக்கும், பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. டக்ளஸ் பீரிஸ் யாழ் பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## யாழ் பொலிஸ்...

—1-ஆம் பக்கத் தொடர்

திரு. அமரக்கோன் இடமாற்றலாகி வருகின்றார்.

அதேவேளையில் இங்கிருந்து இடமாற்றலாகிச் சென்ற இரண்டு உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்களின் இடத்துக்கு ஐந்து உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்கள் மாற்றம் பெற்றுள்ளனர். திருவாளர்கள் செல்லத்துரை, ஜெயசூரியா, ஜி. டபிள்யூ. பெரேரா, எஸ். எம். பி சில்வா ஆகியோர் ஏற்கனவே வந்துள்ளனர்.

கம்பஹாவிலிருந்துமற்றொரு உதவி பொலிஸ் சுப்பிரிண்டனான திரு ஆர். எம். செனிவிரத்தின பண்டா அடுத்த வாரம் வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வண. பஸ்தியன் இரங்கல் பூசை

யாழ். கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை 19ந்திகதி மாலை 4.30 மணிக்கு மன்னார் வங்காலைப் பங்கில் அகால மரணமடைந்த வண. பிதா. மேரி பஸ்தியன் ஆன்மசாந்திக்காகவும், அவருடன் இறந்த மற்றும் அனைவருடைய ஆன்மசாந்திக்காகவும் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இப் பலிப் பூசையை சம்பத்திரிசியார் முன்னாள் அதிபரும், தற்போது பாஷையூர் கொழும்புத்துறை பங்குகுருவருமாகிய அருட்திரு. பிரான்சிஸ் அடிகளாரால் நிறைவேற்றி வைக்கப்படும்.

## சைக்கிள் லைசன்ஸ் பணமும் கொள்ளை

நேற்றுப் பகல் பன்னிரண்டு மணியளவில் யாழ் மாவட்ட அபிவிருத்தச் சபை நெல்லியடி உப அலுவலகத்தில் சைக்கிள் உத்தரவுப் பத்திர விநியோகம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அங்குவந்த இனந்தெரியாத மூவர் நாற்பத்திரண்டு ரூபாவைக் கொள்ளையடித்துச்சென்றனர்.

## உங்களுடைய அடையாள அட்டையா?

பத்தமனி, வீரசிங்கம் விக்னேஸ்வரன் மூளாய், முருகேசு நடராசா ஆகியோரது அடையாள அட்டைகள் யாழ். பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## புல்டோசருக்கு குண்டு வசக்

நேற்றுக்காலை பலாலியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'புல்டோசர்' ஒன்று வீதியில்வைத்து இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்து முற்றாகச் சேதப்படுத்தப்பட்டதாம். இந்த புல்டோசரின் பெறுமதி சுமார் பத்து லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## தொண்டாதிரும்புகிறார்

தற்போது அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் எஸ். தொண்டமான் நாளை மறுதினம் நாடு திரும்புகின்றார்.

## துப்பாக்கிச் சூடு...

—1-ஆம் பக்கத் தொடர்

அருகில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவரும் காயமடைந்து மருதுவ அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அம்மன்கோவில் ஆலயத்தருகில் புதையுண்டிருந்த ட்ராக்டரின் டயர்கள் சமூகவிரோதிகளால் சேதமாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## பூசா இளைஞர்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யப்பட்டு, நாளை யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தமக்குத் தகவல் தரப்பட்டுள்ளதாக யாழ் பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

'ஈழமுரசு' சாயாபா அட்வர்டைசிங் அசோசியேட்ஸ் ஸ்தாபனத்தாரால், 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில்
18-1-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.